**DILKA WATCH & RADIO WORKS**
Specialist in Watch & Radio Repairs
★
284, STANLEY ROAD,
(Near Vanavil Cool Bar)
JAFFNA.
★ BRANCH:
Kandy Road,
Chavakachcheri.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

டில்கா வாச் வேக்ஸ்
அன்
றேடியோ வேக்ஸ்
சகல மணிக்கூடுகள்,
றேடியோக்கள்
உத்தரவாதத்துடன்
திருத்தப்படும்.
284, ஸ்ரான்லி வீதி,
(வானவில் அருகில்)
யாழ்ப்பாணம்.
★ கிளை: கண்டி வீதி,
சாவகச்சேரி.

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 21 சனிக்கிழமை (06 – 11 – 1993) **UTHAYAN** A Lively National Tamil Daily கதிர் 343

# கைதாகும் தமிழர்களை மனித கேடயமாக பயன்படுத்துவதற்குப் படையினர் திட்டம்!

### இன்று படகுச் சேவை

யாழ்ப்பாணம், நவ. 6
கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்தில் நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஒ)

## நீர்கொழும்பை நோக்கி புலிகளின் படகுகள்!

### மீனவருக்குப் பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 6
நீர்கொழும்புப் பகுதியை நோக்கி விடுதலைப் புலிகளின் பல படகுகள் சென்று கொண்டிருப்பதாக பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

இவ்வாறு கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் படகுகள் குறித்து குறிப்பிட்ட சில பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களை எச்சரிக்கையாக இருக்கும்படி பொலிஸார் கேட்டுக்கொண்டவர் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் எச்சரிக்கையை அடுத்து நீர்கொழும்பு, புத்தளம், சிலாபம், பழுனுகம மற்றும் ஹெந்தளைப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் உஷாரடைந்துள்ளனராம்.
(ஒ-த-எ)

## வடக்கில் 3 கட்டங்களாக இராணுவ நடவடிக்கைகள்

யாழ்ப்பாணம், நவம்பர். 6
கொழும்பில் தற்போது கைதாகி வரும் தமிழ் இளைஞர்கள், யுவதிகளை மனித கேடயமாகப் பயன்படுத்தி வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் திட்டமிட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். குடாநாட்டில் மாதகல், இயக்கச்சி, பலாலி ஆகிய பகுதிகளில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினர்.

மூன்று பகுதிகளாக இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள உள்ளனர் என்றும் –

தினமும் ஸ்ரீ லங்கா விமானப் படை விமானம் ஒன்றும் ஏயர் லங்கா பயணிகள் விமானம்ஒன்றும் பலாலி விமானத்தளத்துக்கு வந்து திரும்புகின்றன என்றும்–

இது குடா 'நாட்டில் மேற்கொள்ள உள்ள பாரிய நடவடிக்கைகளின் முன்னேற்பாடுகளே என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கிலிருந்து தென் பகுதிக்கு செல்லும் பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் சோதனை என்ற பெயரில் ஸ்ரீலங்கா படையினரால் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஆயிரக்கணக்கானோர் இது வரை விடுவிக்கப்படவில்லை.

இவர்களை மனித கேடயமாகப் பயன் படுத்தியே பாரிய இராணுவ நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட உள்ளதாக அங்கிருந்து வரும் மக்கள் தெரிவித்திருப்பதாக புலிகளின் குரல் செய்தி தெரிவித்தது.
(இ-9)

### மூர்சந்தி முரளி



கொழும்பிலை தமிழருக்கு பொலீஸ் வந்து கைது செய்யும் எண்டு பயம்... சிங்களவருக்கோ கேட்டதுக்கு எல்லாம் பயம் பாருங்கோ......!

## இன்று வானில் அரிய நிகழ்ச்சி!

### சூரியன் - பூமிக்கு இடையே புதன்கிரகம்கடந்துசெல்லும்

இன்று சனிக்கிழமை வானில் அரிய நிகழ்ச்சி ஒன்று இடம் பெறுகிறது என வான சாஸ்திர வல்லுநர்கள் கூறியுள்ளனர்.

சூரியனுக்கும் பூமிக்கும் இடையே புதன் கிரகம் கடந்து செல்வதே இந்த நிகழ்வாகும்.

கீழ் வானில் ஒரு கரும்புள்ளிபோல இது தென்படும்.

இன்று காலை 8.37 மணிக்கும் காலை 10.18 மணிக்கும் இடையே புதன் கிரகம் கடந்து செல்லும் நிகழ்வு இடம் பெறும்.

சூரியனின் வட்டத்தினுள் இடம்பெறும் இந் நிகழ்வை நேரடியாகக் கண்களால் அல்லது ''பைனாக்குலர்'' உதவியுடன் பார்க்கக் கூடாது என்றும் –

அப்படிப் பார்ப்பது கண்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் வானிலை ஆராய்ச்சி நிலையம் எச்சரித்து உள்ளது.
(ஒ-எ-117)

## திடீர் அபாய ஒலியினால் கொழும்பில் பரபரப்பு!

### மக்கள் பதற்றம், பீதி!!

கொழும்பு, நவ. 6
கடந்த திங்களன்று கொழும்பு நகரில் காலை வேளையில் திடீரென எழுப்பப்பட்ட அபாய ஒலியினால் (சைரென்), அப்பகுதி மக்கள் பெரும் பரபரப்பு அடைந்தனர்.

சுகாதார அமைச்சுக் கட்டடத்திலேயே அன்றைய தினம் அபாய ஒலி எழுப்பப்பட்டது.

இதனால் அலுவலக ஊழியர்கள் பதற்றமுற்று வெளியே தலை தெறிக்க ஓடினர். வெளியே நின்ற மக்களும் ''என்னவோ ஏதோ'' என்று பீதியடைந்தனர். அந்தப் பகுதி எங்கும் பரபரப்பு நிலைமை தோன்றியது. அந்த அபாய ஒலி தற்செயலாக எழுந்தது எனத் தெரிந்ததும் நிலைமை சீரடைந்தது.
(ஒ-த-எ)

## தமிழர் பகுதியைப் போருக்கு தயார் செய்து வருகின்றோம்

### அன்ரன் பாலசிங்கம் பேட்டி

கொழும்பு, நவ. 6
அமைதிக்கான வாய்ப்பு பிரகாசமானதாக இல்லை. தமிழர் பகுதி முழுவதையும் போருக்காகத் தயார் செய்கின்றோம். பேச்சு, அமைதி ஆகியவற்றுக்கான வாய்ப்பே இல்லை.

விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு கூறியதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தை நடத்தும் திட்டத்தை இலங்கை அரசு கைவிட்டு விட்டதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் பெரிய அளவிலான போருக்கு தயாராகி வருகின்றார்கள் என்றும் வெரித்தாஸ் தெரிவித்தது.

வடக்கு – கிழக்கு பகுதிகளை சேர்ந்த சுமார் 2 லட்சம் இலங்கைத் தமிழர்கள் மேற்கு நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர் என்றும் வெரித்தாஸ் தெரிவித்தது.
(ஒ-எ)

## கிளாலிகடல்பகுதியில் ஹெலித் தாக்குதல்!

ஹெலியில் இருந்து கிளாலி கடற்பகுதியை நோக்கி நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 50 கலிபர் தாக்குதல் நடத்தப்பட்டது.

கடற்படையினர் பீரங்கிப் படகுகளில் இருந்தும் தாக்குதல்களை நடத்தினர் எனினும் படகுச் சேவை தடையின்றி நடந்தது.

இதேவேளை, ஆனையிறவு முகாமில் இருந்து ஆலங்கேணிப் பகுதியை நோக்கி அகோர ஷெல் தாக்குதலும் நடத்தப்பட்டது.

இதற்கிடையில்—

நேற்று முன்தினம் இரவு பொருள்களை ஏற்றிக் கொண்டு வந்த ஒரு படகையும் படகோட்டியையும் காணவில்லை என ஒரு செய்தி தெரிவித்தது. (ஒ-எ117-17)

## சர்வசன வாக்கெடுப்பை முறியடிக்க புலிகள் முயற்சி!

### பாதுகாப்பு அதிகாரிகள் தகவல்

கொழும்பு, நவ. 6
வடக்கு – கிழக்கு இணைப்பு குறித்து நடத்தப்படவிருக்கும் சர்வசன வாக்கெடுப்பை முறியடிப்பதற்கான முயற்சிகளில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சர்வசன வாக்கெடுப்பை நடத்தும் சூழ்நிலையைக் கெடுக்கும் திட்டம் ஒன்று வகுக்கப் பட்டிருப்பதாக தகவல் கிடைத்திருப்பதாகப் பாதுகாப்பு உயர் நிலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சர்வசன வாக்கெடுப்பின் போது சுதந்திரமாக வாக்கைப் பயன் படுத்த கிழக்கு மாகாண மக்களுக்கு வாய்ப்புக் கிடைப்பின் அவர்கள் இணைப்புக்குஎதிராகவேவாக்களிப்பர் என்பதை விடுதலைப் புலிகள் தெளிவாகத் தெரிந்துள்ளனர் என்றும்—

அதனைத் தொடர்ந்தே சர்வசன வாக்கெடுப்பை முறியடிக்க விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளனர் என்றும் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்ததாக வெரித்தாஸ் சிங்கள சேவையில் அறிவிக்கப்பட்டது. (ஒ-எ-6)

## கடந்தவாரம் மட்டும் 67 தமிழர் கைது

யாழ்ப்பாணம், நவ. 6
கொழும்பில் கடந்த வாரத்தில் மட்டும் 67 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆட்டுப்பட்டித் தெரு, மத்திய வீதி, சஞ்சி ஆராய்ச்சி வத்தை ஆகிய பகுதிகளில் வீடுகளிலிருந்து வெளியே வரும்போது 50 இளைஞர்களும் —

கிருலப்பனை வீதி சுற்றி வளைக்கப்பட்டதில் மேலும் 17 பேரும் கைதாகினர்.
(இ-9)

## தேசவிரோதிகளின் கெடுபிடி வவுனியாவில் அதிகரிப்பு!

வவுனியாவில் தேச விரோதிகளின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.

தமிழ்ப்பயணிகள் வவுனியாவிலும் வவுனியா சோதனைச் சாவடியிலும் பிடித்துச் செல்லப்படுவதும் தாக்கப்படுவதுமான சம்பவங்கள் கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ளன.

கடந்த சனியன்று திருகோணமலையைச் சேர்ந்த 20 வயது இளம்பெண் வவுனியாவில் ரெலோ தேசவிரோதிகளால் பிடித்துச் செல்லப்பட்டார். இவர் பற்றிய எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

நொச்சிமோட்டைப் பாலத்துக்கு அருகில் பற்றைகளுக்குள் பதுங்கியிருக்கும் தேச விரோதக் குழுக்கள் வரிசையில் சோதனைச் சாவடிக்கு செல்லும் இளைஞர்களையும் யுவதிகளையும் பிடித்துச் செல்லும் நடவடிக்கைகளும் கூடுதலாக இடம்பெற்று வருகின்றன. (த-எ)

## யுத்தத்தில் கொல்லப்படுவது வறிய சிங்கள இளைஞர்களே!

### ஆளுநர் இம்புலான சொல்கிறார்

கொழும்பு, நவ. 6
வறிய சிங்கள இளைஞர்கள் ஆயிரக் கணக்கில் விடுதலைப் புலிகளினால் இன்று கொல்லப்படுகின்றனர். ஏழைச் சிங்களப் பெற்றோரின் பிள்ளைகள் மட்டும் தான் இந்த யுத்தத்தில் கொல்லப்படுகின்றனர்.

சுகபோக வாசிகளின் பிள்ளைகள் இராணுவத்தில் சேருவதில்லை. அப்படி சிலர் சேர்ந்தாலும் உயர் பதவிகளில் இருப்பார்கள். தேசபக்தி என்பது ஏழைச் சிங்களப் பிள்ளைகளிடம் மட்டும்தான் உள்ளதா?

இவ்வாறு கேள்வி எழுப்பினார் மத்திய மாகாண ஆளுநர் பி. ஸி. இம்புலான.

வடக்கு-கிழக்குப் போரில் கொல்லப்பட்ட படையினருக்கான நினைவு மண்டபம் ஒன்றைக் கட்டுவது பற்றிய ஆலோசனைக் கூட்டம் கடுகஸ்தோட்டை சிங்கள சீமாமாய மண்டபத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்துக்கு தலைமை வகித்துப் பேசும்போதே மத்திய மாகாண ஆளுநர் பி. ஸி. இம்புலான இவ்வாறு சொன்னார்.

ஜெயவர்த்தனா அரசில் அமைச்சராகப் பணியாற்றி இருந்த திரு. இம்புலான
(3 ஆம் பக்கம் பார்க்க)

## ருக்மனுக்கும் எம்.பி. பதவி?

தனிக்கட்சி அமைத்துச் சிலகாலம் செயற்பட்ட ருக்மன் சேனநாயக்காவையும் தேசியப்பட்டியல் மூலம் எம்.பியாக நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைப்பீடம் முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ருக்மனுக்கு நாடாளுமன்றத்தில் இடமளிப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின்தேசியப் பட்டியல் எம். பியான அலெப் றொபர்ட்சன் பதவி விலகலாம் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறுகின்
( 3 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் வாரத்தையொட்டி படைகள் உஷார் நிலையில்!

### முகாம்கள் தாக்கப்படலாம் என எச்சரிக்கை

கொழும்பு, நவ. 6
விடுதலைப் புலிகள் இம்மாத இறுதியில் நடத்த விருக்கும் மாவீரர் வாரத்தை ஒட்டி, நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். என்றும் பாதுகாப்பு நிலைகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சுப் பேச்சாளர் ஒருவரை மேற்கோள் காட்டி ''த ஐலண்ட்'' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

மாவீரர் வாரத்தில் வடபகுதி இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் நடத்துவதே விடுதலைப் புலிகளின் இலக்குகளில் ஒன்றாக இருக்கும் என்றும் அப்பேச்சாளர் தெரிவித்தார்.

இத்தாக்குதல்களை சமாளிக்கக் கூடிய விதத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.
(ஒ-த-எ)

### யாழ் பல்கலைக்கழகத்துக்கு

## கூடுதல் மாணவரை அனுமதிக்க கோரி ஒன்றியம் மீண்டும் கடிதம்

யாழ்ப்பாணம், நவ. 6
1991 - 92 பல்கலைக் கழக அனுமதியில் தெற்கு மாணவர்களுக்குச் செய்தது போல் 1992 – 93 அனுமதியில் வடக்கு - கிழக்கு மாணவர்களுக்கு அனுமதி வழங்கி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு கூடுதலான மாணவர்களை அனுமதிக்க வழி வகுக்கவேண்டும்.

1992 - 93 பல்கலைக் கழக அனுமதியில் பாதிக்கப்பட்ட (யாழ்ப்பாண) மாணவர்கள் ஒன்றியம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவருக்கு, அனுப்பிய கடிதத்தில் இவ்வாறு கோரியுள்ளது.
(3ஆம் பக்கம் பார்க்க)

போர்மேகம் சூழ்கின்ற பொழுது
புதிய வரலாறை நீஎழுது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

+ இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் போஷகர்

# அமரர் சோமகலாவல்லி சண்முகலிங்கம் அஞ்சலி மலர்

6 - 11 - 1993

## செஞ்சிலுவைக் கோட்பாட்டை தாரகமந்திரமாக்கி

## மக்கள் நலன்நாடி உழைத்த உத்தமத் தொண்டர்



அமரர் சோமகலாவல்லி சண்முகலிங்கம் அவர்கள் திரு. திருமதி பே. செல்லையா அவர்களின் இனிய புத்திரியாக தென்மராட்சிப் பகுதியில் கொடிகாமத்தில் பிறந்தார். கல்விப் பராயத்தை எய்தியதும் யாழ். சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும், நல்லூர் சாதனா பாடசாலையிலும் பயின்றார்.

இளம்பராயம் தொட்டு அன்பு, கருணை, இரக்கம் போன்றவை திருமதி சண்முகலிங்கம் அவர்களிடம் ஊறியிருந்தமையினால் பிறருக்கு உதவி செய்யும் மனப்பாங்கும் இவருடன் ஒட்டி வளர்ந்து வந்தது. இது இவரை முதலுதவிப் பயிற்சியில் புலமை பெறுவதற்கும் அப்பணியில் ஈடுபடுவதற்கும் உந்துசக்தியாக விளங்கியது. இவரது நல்லியல்புகழும் சமூக சேவையும் சிறு வயதிலேயே அவ்வூர் மக்களின் நன்மதிப்பை இவர் பெறுவதற்கும் காரணமாக இருந்தது என்றால் மிகையாகாது.

இவர் தான் பெற்ற அறிவை பிறருக்கும் பகிர வேண்டுமென்றமனப்பான்மையாலன்றோ பண்டாரவளை புனித மரியாள் கன்னியர் பாடசாலையில் (Little Flower St. Mary's Convent) ஆசிரியர் பணியை மேற்கொண்டார். அங்கும் அவர் சமூகத் தொண்டு தொடர்ந்தே சென்றது.

இவர், 29 – 8 – 1957இல் வைத்திய கலாநிதி சோமசேகரம் சண்முகலிங்கம் அவர்களை தமது வாழ்க்கைத் துணைவராகக் கொண்டார், அவரின் கணவரின் வைத்தியப் பணிகளும் அன்னாரின் சமூகப் பணிகளுக்கு மெருகூட்டுவதாக அமைந்தன. இவர்களின் மணவாழ்வு இன்புற்றிருக்க இருபுதல்விகளையும், ஒரு புதல்வனையும் இறைவன் கொடுத்தருளினார். குடும்பம் பாரமென ஒருசாரார் எண்ணும் காலத்திலும்கூட திருமதி சண்முகலிங்கம் அவர்கள் அதற்கு எதிர்மாறாக குடும்பப் பொறுப்புகளிலும் சமூகத் தொண்டிலும் சமமாக ஈடுபட்டு தன் திறமைகளை வெளிக்காட்டினார்.

### செஞ்சிலுவையில் இணைந்தார்

தொண்டு செய்யச் சந்தர்ப்பம் பார்த்திருந்த அம்மையார் 1982 ஆம் ஆண்டில் தம்மை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தில் இணைத்துக் கொண்டார். 1983 ஆம் ஆண்டில் தென் இலங்கை இனக் கலவரத்தினால் பாதிக்கப்பட்டு வட இலங்கைக்கு இடம் பெயர்ந்து வந்த தமிழ் மக்களின் துயர்துடைக்க மேலும் சில சமூக நலன்விரும்பிகளுடன் இணைந்து உணவு, உடை, மருத்துவ வசதி போன்ற இன்னோரன்ன உதவிகளைச் செய்து புனர்வாழ்வழித்தார்.

அன்னாரின் சமூகத் தொண்டை உணர்ந்த பல நலன்விரும்பிகள் பணமாகவும், பொருளாகவும் அவரின் பணிக்கு உதவினர். அதன் பயனாக அன்னாரின் பணி விஸ்தரிக்கப்பட்டது. ஒரு கட்டத்தில் மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க தன் கணவரின் தனிப்பட்ட மருந்தகத்தில் இருந்த மருந்து வகைகளையும் பயன்படுத்தினார். அவரின் கணவரும் அவர் பணிக்கு ஒத்தாசை அளித்தார்.

இதன் பின் அன்னாரின் தீவிர முயற்சியால் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கொழும்

### இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணக் கிளை

புக் காரியாலயத்திலிருந்தும் உதவிகளைப் பெற்றதுடன் அன்னார் நேரடியாக கொழும்பு சென்றும் அவர்களுக்கும் இங்கிருந்த இன்னல்களை விளக்கி ஏற்ற உதவிகளைப் பெற்று மக்களின் துயர் துடைத்தார்.

1983 தொடக்கம் 1986 வரை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் நிர்வாக சபை உறுப்பினராகவும், நிவாரண விநியோகப் பகுதியின் பொறுப்பாளராகவும் இருந்தார். இவர் 1987–1988 வருடத்திற்கு கௌரவ இணைச் செயலாளராகவும், பின்னர் 1988 – 1989ஆம் ஆண்டில் உபதலைவராகவும் யாழ். கிளையில் பதவி வகித்தார். 1991 - 92 ஆம் ஆண்டில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணப் பிரிவு உதவி அரசாங்க அதிபரின் பிரிவில் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவராகவும், 1992 ஆம் ஆண்டு புரட்டாதி



மாதம் தொடக்கம் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையின் போஷகராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

### பண்பாளர்

அன்னார் தன் கடமையை செவ்வனே செய்ததுமன்றி செஞ்சிலுவைச் சங்கத்தின் கோட்பாட்டைத் தனது தாரக மந்திரமாகக் கொண்டு அதனை முழுமையாகக் கடைப்பிடித்தும் பணியாற்றினார். அவர் ஓர் செஞ்சிலுவைத் தூண் — ஏனையோருக்கு புத்தி சொல்லி செஞ்சிலுவைச் சங்கத்தையும் அதன் கோட்பாட்டையும் வளர்த்து வந்தார். அவர் எவரையும் தூஷித்ததோ விட்டு விட்டு ஓடியதோ கிடையாது. மாறாக தம்மைத் தூஷித்தவரையும் நேசித்தார். என்றும், எப்போதும், மலர்ந்த முகத்துடனும் அன்பான வார்த்தையுடனும் மற்றவர்களை அணுகுவதும் உதவி செய்வதும் அன்னாரின் உடலுடனும் உள்ளத்துடனும் ஒட்டிய பண்புகள் ஆகும்.

செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் அனைவரையும் பெரியோர் சிறியோர் என்னும் பாகுபாடின்றி எல்லோரையும் ஒரேமாதிரி நடத்திய பெருமையும் இவரைச் சாரும். அது மட்டுமன்றி இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையில் செஞ்சிலுவைச் சங்க கொடித்தினத்தை முதல்முதலாக அறிமுகப்படுத்திய பெருமையும் அன்னாரையே சாரும். பிரிவுகளே இல்லாது இயங்கிய இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையில் உபதலைவராக இருந்த திருமதி சண்முகலிங்கம், தானே முன்னின்று தீவுப்பகுதி உட்பட குடாநாடு அடங்கலிலும் கொடிதினத்தை அறிமுகப்படுத்தியது மட்டுமன்றி அக்காலத்தில் பற்பல நற்சேவைகளையும் செய்துள்ளார்.

செஞ்சிலுவைச் சங்கத்தின் வளர்ச்சிக்காக அயராது மனதார உழைத்த இப்பெண்மணி ஓர் துணிச்சல் மிக்க இலட்சியவாதி. அன்னார் அமரத்துவம் அடைந்தது செஞ்சிலுவைச் சங்கத்திற்கு மட்டுமன்றி எமது மக்களுக்கும் அளவிட முடியாத இழப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருமதி சண்முகலிங்கம் அவர்கள் சமூகத் தொண்டில் மட்டுமன்றி சமயத் தொண்டாலும் மிக்க ஆர்வம் உள்ளவர். அவர் சைவ மகளிர் சபையின் தலைவியாக இருந்தார் என்பது அதற்கு சான்றாகும்.

அன்னார் இவை மட்டுமன்றி, றோட்டறிக் கழகத்தின் ''இன்ரவீல்'' கழகத்தின் (Inter Wheel Club) தலைவராகவும், மகளிர் பேரவையின் தலைவராகவும் தொண்டாற்றிக் கொண்டிருந்தார்.

### ஈடுசெய்ய முடியாத இழப்பு

அன்னாரின் பிரிவு யாழ். மாவட்ட மக்கள் அனைவருக்கும், குறிப்பாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளைக்கும் பேரிழப்பாகும். இவர் விட்டுச்சென்ற இடைவெளியானது யாராலும் ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும். அன்னாரின் சேவையையும் அன்பையும், ஆற்றலையும், துணிச்சலையும் விபரிக்க வார்த்தைகள் போதா.

இவர் அமரத்துவம் அடைந்தாலும் இவர் விட்டுச்சென்ற சேவையும், ஈட்டிய புகழும் என்றும் எம் மண்ணில் நிலைத்து நிற்கும். அன்னாருக்கு நாம் செய்யும் தொண்டு யாதெனில் அவர் காட்டிய சமூகசேவை வழியை, அவர் கடைப்பிடித்த செஞ்சிலுவைக் கோட்பாட்டை, அவரின் துணிச்சலை யாமும் தொடர்வதே.

“அன்பிலார் எல்லாம் தமக்குரியர்
அன்புடையார் என்பும் உடையர் பிறர்க்கு”

### இலங்கை செஞ்சிலுவைச் சங்க இலட்சியங்கள்

| | | |
|---|---|---|
| 01. | மனிதாபிமானம் | — HUMANITY |
| 02. | பாரபட்சமின்மை | — IMPARTIALITY |
| 03. | நடுநிலைமை | — NEUTRALITY |
| 04. | தனித்துவம் | — INDEPENDENCE |
| 05. | தொண்டர் சேவை | — VOLUNTARY - SERVICE |
| 06. | ஒற்றுமை | — UNITY |
| 07. | உலகளாவிய தன்மை | — UNIVERSALITY |

விளம்பர இல. (சி-6327)


அமரர் சோமகலாவல்லி அவர்களுக்கு

## கண்ணீர் அஞ்சலி

### மானிடத்தை நேசித்த அன்னை

போர்மேகம் கவிந்திருக்கும் எம்புனித மண்துறந்து
யார் காலில் விழுந்தேனும் வெளிநாடு பாய்வமென
அங்கலாய்ப் பார்மத்தியிலே அன்னையே உன்பிரிவு
நெஞ்சத்தைச் சுண்டிக்கண் ணீரைக் கேட்கிறது

நோய்க்கு மருந்தில்லை நுகர்வதற்கு உணவில்லை
மாய்க்கும் இருள் நீக்க மண்ணெண்ணெய் தானுமில்லை
புக்காராக் குண்டுகளும் புலம்பெயர்க்கும் செல்லடியும்
சிக்காராய் மலிந்திருக்கும் தேசத்தை நேசித்தாய்

செஞ்சிலுவைச் சங்கமிங்கு தோன்றி நிலைபெறவே
அன்னையே தலைவியாய் அதிபராய் பணிபுரிந்தாய்
இந்திய ராணுவத்தின் இடர்களுக்கு ஆளானாய்
சந்தேகம் கொண்டதுன்மேல் சிறிலங்கா ராணுவமும்

செஞ்சிலுவைச் செம்பிறைச் சங்கங்கள் மட்டுமென்ன
அங்க வீனர்கள் அகதிகள் அமைப்புக்கள்
றோட்டறிக் கழகங்கள் மகளிர் குழுக்களென
நீண்டு கிடக்குதம்மா நீ இணைந்த நிறுவனங்கள்

நாடறிந்த டொக்டரின் நல்வாழ்க்கைத் துணையானாய்
பீடுமிகு செல்வங்களைப் பெற்றெடுத்த தாயானாய்
வீட்டுக்குள் ஆற்றும் விருந்தோம்பல் - அது கடந்து
நாட்டுக்குள் உழைத்திட்டாய் நன்றியுடன் அழுகின்றோம்

அன்னையே உன்வாழ்வும் ஆற்றியநற் தொண்டுகளும்
முன்னுதா ரணமாய் எம்முன்னே விரியுதம்மா
என்னதான் தடைவரினும் இந்தமண் மக்களுக்காய்
அன்னையே உன்பணியை அணையும்வரை நீகொடுத்தாய்

விண்ணவர்கள் தங்களுக்கு வேண்டி உழைப்பதற்கோ
அன்னையே! சோமகலா வல்லி அம்மாவே!
உன்னை அழைத்தார்கள் உன்பயணம் தொடங்கவரும்
வெற்றிடத்தை எண்ணியதால் விம்மிவிடை தருகின்றோம்

மானிடத்தை நேசித்த மனிதாபி மானஅன்னை
சோமகலா வல்லிஉன் தொண்டுகளுக்கு எம்வணக்கம்
நீ செய்த சேவைகளை நினைத்து நாம் தொடர்வோம்
போய்வருக தாயே! புகழ்உடம்பைப் பார்த்திருப்போம்!

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை.



## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள நஷனல் பனசோனிக் ஜப்பான் கெசற் றேடியோ (மொடல் 5310) Four Band விற்பனைக்குண்டு தொடர்பு: சி. நாதன் இல. 16/3, விதானையார் வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (27895)

பொமனேரியன் நாய்க்குட்டி (மண்நிறம் கறுப்பு கலந்தது, பூச்சி நீக்கியது) விற்பனைக்குண்டு. இறை இரக்கத்தின் புத்தகம் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: E. அன்ரனி, இல: 392, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (பஸ்தியான் சந்தி) (27910)

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழி முட்டைகள், பண்டம் கோழிமுட்டைகள், வான்கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர் இல: 19, முருகேசர் ஒழுங்கை முத்திரச்சந்தையடி, நல்லூர். (27828)

### தேவை

நல்ல நிலையில் உள்ள றோணியோ மெஷின் உடனடியாகத் தேவைப்படுவதால் விற்பனைக்கு உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்: இல: 918, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (சி–6501)

### விற்பனைக்கு

திறமான நஷனல் என். வி. 370 டெக், டி. வி. ஆங்கில தட்டெழுத்து யந்திரம், வீட்டு தளபாடங்கள், தண்ணீர் இறைக்கும் யந்திரம், பதினாறு ஸ்போட்ஸ் கப்ஸ் முதலியன. ஷண் இல. 387A, கோவில் வீதி, நல்லூர். (சங்கிலியன் வீதி, அருகில்) (27911)

5 K. V. மின்வலுவுள்ள ஜெனரேற்றர் ஒன்றும் டீசல், Panasonic V. D. O. Mixer ஒன்றும், (WJ-MX–10) விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் காலை 9 தொடக்கம் 12 மணிவரை. ரெலிகோணர், நவீன சந்தை, (மேல்மாடி) சாவகச்சேரி. (6583)

### மணமகன் தேவை

இந்து, 36 வயது (செவ்வாய்க் குற்றமற்ற கேட்டை) அழகிய மணப்பெண்ணுக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (27912)

இந்து (செவ்வாய் 12 திருவோணம்) 34 வயது, படித்த மணப்பெண்ணுக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (27913)

### புலமைப்பரிசில் பயிற்சி

விஜயதசமியன்று வெளியிடப்பட்ட புலமைப்பரிசில் மாதிரிப் பயிற்சியையும் (21 கட்டுரைகளையும், 10 வினாத்தாள்களையும் விடைகளுடன்) எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். எம்மிடம் நேரடியாகப் பெறுபவர்களுக்கு விசேட கழிவுண்டு. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (27871)

### ஆண்டு - 4 வினாத்தாள்

1994 புலமைப்பரிசில் மாணவருக்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளியிடப்படும் தொடர் பரீட்சை வினாத்தாளின் 15ஆவது வினாத்தாள் 6–11–93 சனிக்கிழமை பிற்பகல் 3·00 மணிக்கு வெளியிடப்படும். வினாத்தாள் பெற்றுக்கொள்ளலாம். எடிசன் அக்கடமி (யாழ். இந்து அருகில்), கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (27917)

### தவறிவிட்டது

கு. ரத்தினம் ஆகிய நான் சுன்னாகம் மக்கள் வங்கி முன்னால் சிலருடன் உரையாடிக் கொண்டிருந்தபோது இல. 250731060X தேசிய அடையாள அட்டை அடங்கிய கவர் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் கு. ரத்தினம், குமாரலிங்கம் லேன், இணுவில் கிழக்கு என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (27918)

### ''நீமியா உரம்''

பூச்சி புழுக்களிலிருந்து பயிர்களைப் பாதுகாக்க, மண்வளம் பெருக்கி விளைச்சலை அதிகரிக்க, அடிக்கட்டு உரத்தைக் கரையாது இறுக்கமாக வைத்திருக்க 'நீமியா உரம்'. அண்ணாகோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. ''மில்க்வைற்'' (சி–6306)

### இந்தியா ருடே

இந்தியா ருடே ஆண்டுமலர் 93–94 சொற்ப பிரதிகள் கைவசம், தீபாவளி வாழ்த்து மடல்கள் மொத்த விற்பனையாளர் மக்மிலன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். ஸ்ரீகாந் புத்தகசாலை, 165, பவர் கவுஸ் றோட், யாழ்ப்பாணம். (சி–6523)

### திருத்தவேலைகள்

உத்தரவாதத்துடன் மணிக்கூடுகள், றேடியோக்கள் திருத்தப்படும். உதிரிப்பாகத்திற்காக மணிக்கூடுகள் வாங்கப்படும். டில்கா வாச் & றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி றோட் (வானவில் அருகில்). கிளை: கண்டி றோட், சாவகச்சேரி. (சி–6176)

### றோணியோ பிரதி

குறித்த தவணையில் தரமான முறையில் றோணியோ செய்து கொள்ளலாம். 100 பிரதிக்கு 30/– மட்டும். அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (வெலிங்டன் சந்திக்கு அருகில்) (சி–6526)



## கண்ணீர் அஞ்சலி

### சோமகலாவல்லி சண்முகலிங்கம்

யாழ்ப்பாணம் மத்திய பகவான் ஸ்ரீசத்ய சாயி சேவா நிலையத்தின் ஆரம்பகால உறுப்பினருள் ஒருவரும், சமூக சேவகியும், வைத்திய கலாநிதி சோ. சண்முகலிங்கம் அவர்களின் உத்தம பத்தினியுமாகிய திருமதி சோமகலாவல்லி சண்முகலிங்கம் அவர்களின் பிரிவாற்றாமையால் எம் கண்ணீர் மணிகளையே மாலையாக்கி அவர் காலடியில் சமர்ப்பித்து ஆறுதலடையும் —

யாழ்ப்பாணம் மத்திய பகவான் ஸ்ரீசத்ய சாயி சேவா நிலையத்தினர்.

[illegible] வீதி, யாழ்ப்பாணம். (27919)



அரிய சந்தர்ப்பம்!

### தீபாவளி மலிவு விற்பனை

நவம்பர் 1 ஆம் திகதி முதல்
12 ஆம் திகதி வரை

சகலவிதமான
கைக்கடிகாரங்கள், சுவர்மணிக்கூடுகள்
முதலியன மலிவு விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.

## அல்டி

269/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி- 6514)



## கண்ணீர் அஞ்சலி

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை போஷகரும், சமூக சேவகியுமான

திருமதி
### சோமகலாவல்லி சண்முகலிங்கம்

அவர்கள் இறைபதம் எய்தியமையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகிறோம்.

அன்னாரது குடும்பத்திற்கு எமது அனுதாபங்கள்.

அங்கவீனர் புனர்வாழ்வுக் கழகம்.

312, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (27920)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## சந்திரிகாவின் மோதல்

இலங்கையில் இனப் பிரச்சினை உண்டு. அதனைத் தீர்க்க வேண்டும் என்பதே பெரும்பாலான மக்களின் விருப்பம்.

மாகாண சபைகளினால் நாட்டு மக்களுக்கு எவ்வித பயனும் இல்லை.

வடக்கு - கிழக்கில் நடக்கும் யுத்தத்தில் அரசாங்கம் வெல்லும் என்று எவரும் நினைக்க வேண்டாம்.

இந்த மூன்று விடயங்களையும் எடுத்துக் கூறியிருப்பவர் மேல்மாகாண சபையின் தலைவி திருமதி சந்திரிகா குமாரணதுங்கா.

முதல் இரண்டு கருத்துக்களும் ஜனாதிபதி விஜேதுங்கா பகிரங்கமாக வெளியிட்ட அறிவிப்புகளுக்கு சந்திரிகா கொடுத்துள்ள பதிலடிகள். அவருக்கு அனுப்பிய பகிரங்கக் கடிதத்திலேயே அந்தப் பதிலடிகளும் அடங்கியுள்ளன.

யுத்தம் சம்பந்தமான அவரது மதிப்பீட்டை தெற்கில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் சிங்கள மக்கள் மத்தியில் சந்திரிகா வெளியிட்டார்.

திருமதி சந்திரிகா குமாரணதுங்காவை மேல்மாகாண சபையின் தலைவியாக மட்டும் பார்க்கமுடியாது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலத் தலைவியாகவும் அவரைப் பார்க்க வேண்டும். அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சியின் வேட்பாளருடன் சந்திரிகா வேபோட்டியிடும் சாத்தியம் நிறையவும் உண்டு. தம்பிஅனுராபண்டாரநாயக்கா ஆளும் கட்சியில் சேர்ந்துவிட்ட பின்னணியில் தேர்தலுக்கு முன்னர் சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவி சந்திரிக்காவிடமே சென்றடையும் என்ற அபிப்பிராயம் தெற்கில் வலுத்து வருகிறது.

எது எப்படியோ, அடுத்த வருடத் தேர்தலுக்கு இப்போதிருந்தே தெற்கின் அரசியல் கட்சிகள் ஆயத்தம் செய்யத் தொடங்கி விட்டன. அந்த வகையில் தமிழர் பிரச்சினை, வடக்கு-கிழக்கு யுத்தம் ஆகிய இரண்டு விவகாரங்கள் குறித்தும் தெற்கில் நிறையப் பேசப்படும்.

ஸ்ரீலங்காவின் தலைவர்கள், தமது சொந்த விவகாரங்களை மறந்து தமிழர் பிரச்சினையை, முன்னெடுத்தே தேர்தலில் போட்டியிடுவது வழக்கம். தாம் அரசியல் லாபம் பெறுவதற்கு தமிழர் விவகாரமே இலகுவான பண்டம் என்று கருதுகிறார்கள்.

அடுத்த வருடத் தேர்தலிலும் நிச்சயமாகத் தமிழர் விவகாரமே வாக்கு சேர்க்கும் கருவியாகப் பயன்படுத்தப்படும். அந்த பின்னணியிலேயே ஆளுங்கட்சியினரின் கருத்துக்களையும், எதிரணியினரின் கருத்துக்களையும் நோக்க வேண்டும்.

எதற்கும் மாகாண சபைகள் குறித்தும் வடக்கு-கிழக்கு யுத்தம் குறித்தும் சந்திரிகா சரியான மதிப்பீடுகளைச் செய்துள்ளார்.

எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் அடுத்த பக்கம் சென்றதும், முந்திய தமது மதிப்பீட்டையும், கொள்கையையும் முற்றாக மாற்றிக் கொள்வதே அரசியல் கலை என்பதையும் மறந்து விடுவதற்கில்லை.

தேர்தல் வேளையிலும் மாகாணசபை, யுத்தம் பற்றிய கருத்துக்களை சந்திரிகா மாற்றாதிருந்தால் மட்டுமே அவரை ஏனைய தலைவர்களை விட புறம்பானவராகக் கருத முடியும். மேலும் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதிகாரப் பரவலாக்கல் பற்றிக் குறிப்பிடுகையில் அதற்குரிய அலகின் வடிவத்தை அவர் கூறவில்லை. தமிழர் தாயகக் கோட்பாடு குறித்து தமது தாயின் (பிரிக்க வேண்டும் என்ற) கருத்துக்கு எதிரானவரா அல்லது ஒத்த கருத்தடையவரா என்பதையும் கெட்டித்தனமாக கூறாதிருந்து விட்டார்.

தெற்கு அரசியல்வாதிகள் தமக்குள் மோதிக்கொள்ளும் போது சில உண்மைகள் வெளிவரும் அவ்வளவு தான்!

# தப்பியோடும் படையினரின் எண்ணிக்கை அதிகரிப்பு!

## கொள்ளைச் சம்பவங்களும் தீவிரம்

கொழும்பு, நவ. 6

இராணுவம் மற்றும் பொலிஸ் படைகளில் இருந்து தப்பி ஓடுபவர்களின் எண்ணிக்கையும்—

### இன்று

அவர்களினால் மேற்கொள்ளப்படும் கொள்ளைச் சம்பவங்களும் தென்பகுதியில் அதிகரித்துள்ளன.

ஆயுதங்களுடன் தப்பி ஓடும் இராணுவத்தினரும் பொலிஸாரும் அப்பாவிச் சிங்கள மக்களின் உடைமைகளைக் கொள்ளையடித்து வருகின்றனர்.

அண்மையில் ரி.56 ரகத் துப்பாக்கியுடன் ஒரு லட்சத்து 41 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளை அடித்த ஒரு ரிசர்வ் பொலிஸ் கான்ஸ்டபிள், இரு இராணுவத்தினர் ஆகியோர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். (த)

சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் மாபெரும் கைப்பணிக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் இன்றும், நாளையும் சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். (த)

★ ★ ★

யாழ்ப்பாணம் றோட்டரக் கழகம் நடத்தும் புகைப்பட மனையியல் கண்காட்சிகள் இன்றுகாலை 9 மணிக்கு யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெறும். (த-17)

★ ★ ★

அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் பேரவை நடத்தும் சைவசித்தாந்த வகுப்புத் தொடரில் இன்றும் நாளையும் பிற்பகல் 4.30 மணிக்கு கரணவாய் சைவ சித்தாந்த ஆராய்ச்சிக் கழகத் தலைவர் திருப்பெருந்திருகை திருஞான சம்பந்தக் குருக்கள் சிவப்பிரகாசம் என்ற பொருளில் ஆய்வுரையாற்றுவார். (த)

★ ★ ★

பாலர் கல்விக் கழகத்தின் வருடாந்த கலை நிகழ்ச்சியும் பெற்றோர் தின விழாவும் இன்றும் நாளையும் பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும். (த)

★ ★ ★

கரணவாய் கல்லூபம் சனசமூக நிலையத்தில் இன்று மாலை 4 மணியளவில் சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று நடைபெறும். வட பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கருத்தரங்கில் வட பிராந்திய தொழுநோய்க் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர், சுகாதார போதனாசிரியர் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர். (த-162)

★ ★ ★

'பெண்களும் போசாக்கும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் பாடசாலையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. மகளிர் அபிவிருத்திநிலையம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

இந்தக் கருத்தரங்கில் மானிப்பாய்பகுதியைச்சேர்ந்த இளம் யுவதிகளும், தாய்மார்களும் பங்குபற்ற உள்ளனர்.

யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் எஸ். நச்சினார்க்கினியன், கே. சசிகாந்தன், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி வி. சிறிகாந்தா, மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குணர் சரோஜா சிவச்சந்திரன் ஆகியோர் உரையாற்ற உள்ளனர். (ஓ-9)

## தமிழீழ பொதுக்கல்வி தேர்வு திங்கள் முதல் விசேட தேர்வு

யாழ்ப்பாணம், நவ. 5

கடந்த மாதம் நடைபெற்ற தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பளை, தென்மராட்சி, அச்சுவேலி ஆகிய பகுதிகளில் தேர்வில் தோற்ற முடியாமற்போன மாணவர்களுக்கான சிறப்புத் தேர்வு எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நடைபெறவுள்ளது.

மேற்படி மாணவர்கள் தமக்குரிய பாடசாலைகளுக்கு அனுப்பப்படும் அறிவுறுத்தல்களின்படி அதிபர்களின் அனுமதிக் கடிதத்துடன் இந்த சிறப்புத் தேர்வில் தோற்றலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சிறப்புத் தேர்வின் நேர அட்டவணை விவரம் வருமாறு:-

★ திங்கள் முற்பகல் 8-30— ஆங்கிலம் I, முற்பகல் 9-45— ஆங்கிலம் II

பிற்பகல் 1-00 — சமயம் I, பிற்பகல் 2-15 சமயம் II

★ செவ்வாய் முற்பகல் 8-30 — கணிதம் II, பிற்பகல் 1-00 — கணிதம் I, பிற்பகல் 2-15 — அழகியல் I

★ புதன் முற்பகல் 8-30 — விஞ்ஞானம் II, பிற்பகல் 1-00 — விஞ்ஞானம் I, பிற்பகல் 2-15 — அழகியல் II

★ வியாழன் முற்பகல் 8-30 — வரலாறும் சமூகக் கல்வியும் II, பிற்பகல் 1-00 — வரலாறும் சமூகக்கல்வியும் I, பிற்பகல் 2-15 — அழகியல் (சித்திரம்) III

★ வெள்ளி முற்பகல் 8-30 — தொழில் நுட்பப் பாடம் I, — வர்த்தகமும் கணக்கியலும் II

முற்பகல் 9-30 — தொழில் நுட்பப் பாடம் II, பிற்பகல் 1-00 — வர்த்தகமும் கணக்கியலும் — I

★ ஞாயிறு முற்பகல் 8-30 — தமிழ் மொழியும் இலக்கியமும் I, முற்பகல் 9-45 — தமிழ் மொழியும் இலக்கியமும் II, பிற்பகல் 1-00 — தமிழ் மொழியும் இலக்கியமும் III (ஓ-5)

## கூட்டுறவுப் பரிசோதகர் பரீட்சை இன்று

யாழ்ப்பாணம், நவ. 6

கூட்டுறவுப் பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் இன்று சனிக்கிழமை இங்கு வந்து சேரும் எனவும் —

பரீட்சை குறிப்பிட்டபடி இன்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் எனவும் யாழ். கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க-162)

## கப்பலில் செல்வோர் கவனத்திற்கு

யாழ்ப்பாணம், நவ. 6

கொழும்பு செல்வதற்காகக் கடந்த மாதம் 20 ஆம் திகதி பதிந்தவர்களில் கையொப்பம் இடாதவர்களைக் கையொப்பம் இடுவதற்காக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகத்திற்குச் செல்லும்படி யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் படிவம் ஒன்றைப் பூர்த்தி செய்வதற்காக இவர்களைத் தமது காரியாலயத்துக்குச் சமுகமளிக்கும்படியும் அவர் கேட்டுள்ளார். (க)

## ஹட்டன் நஷனல் வங்கி

யாழ்ப்பாணம், நவ. 6

ஹட்டன் நஷனல் வங்கியின் யாழ். கிளை கடந்த 1 ஆம் திகதி முதல் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள அதன் பழைய கட்டடத்தில் இயங்கி வருகிறது.

இந்த வங்கி கடந்த சில காலமாக யாழ். ஸ்ரான்லி வீதியில் இயங்கி வந்தது தெரிந்ததே. (இ-9)

## வீரப்பனின் சகாக்கள் நால்வர் சுட்டுக் கொலை

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனின் கூட்டத்தைச் சேர்ந்த மேலும் நான்கு பேரை அதிரடிப் பொலிஸ் படை நேற்று சுட்டுக் கொன்றது.

இப்போது வீரப்பன் கூட்டத்தின் எண்ணிக்கை 12 ஆகக் குறைந்துவிட்டது என்று அதிரடிப் பொலிஸ் படைத் தலைவர் வால்டர் தேவாரம் தெரிவித்தார்.

இதேவேளை — வீரப்பன் கூட்டத்தினரால் கொல்லப்பட்டவர்கள் என்று சந்தேகிக்கப்படும் ஏழு பேரின் அழுகிய சடலங்களை சத்தியமங்கலம் காட்டுப் பகுதியில் பொலிஸார் கண்டுபிடித்தனர். பொலிஸாருக்கு தகவல் கொடுத்தவர்கள் என்றதற்காக அவர்களை வீரப்பன் கும்பல் கொலை செய்ததாக பொலிஸார் கூறினர். (ஓ-எ)

## கூடுதல் மாணவரை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களை திறமை அடிப்படையில் அனுமதிப்பது ஒரு ஆண்டில் நடைபெற்ற வேறுபட்ட பொதுக் கல்வித் தராதரப் (உயர்தர) பரீட்சைகளை ஒன்றாகக் கணித்தே செய்யப்பட வேண்டும் என்ற 1979 ஆம் ஆண்டின் நீதிமன்ற தீர்ப்பை மீறி 1990 ஆகஸ்ட் பரீட்சையையும், 1991 ஏப்ரல் விசேட பரீட்சையையும் வேறு வேறாகக் கணித்தே பல்கலைக்கழக அனுமதி வழங்கப்பட்டது.

1993 நீதிமன்றத் தீர்ப்பின்படி 1990 ஓகஸ்ட் 1991 ஏப்ரல் பரீட்சைகளை ஒன்றாகக் கணிக்கும்படி பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு உத்தரவிடப்பட்டது ஆனால் ஆணைக்குழு பௌதிகவியல் மாணவர்களுக்கு மட்டும் இதை அமுலாக்கியது. கலைத்துறை, உயிரியல்துறை மாணவர்களைப் பொறுத்தவரை இந்தத்தீர்ப்பு அமுலாக்கப்படவில்லை.

இருப்பினும் ஏற்கனவே செய்யப்பட்ட 1991 - 92 அனுமதியில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும்.

இரண்டு பரீட்சைகளையும் (1990 ஆகஸ்ட், 1991 எப்ரல்) வேறாகப் பார்க்கும் மானியக் குழுவின் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது என்றே அர்த்தப்படுகிறது. 1991 — 92 கல்வி ஆண்டில் அனுமதித்த மாணவர்களின் எண்ணிக்கையில் மாற்றம் எதுவும் செய்யாதபடியால் மானியக் குழு 1979 நீதிமன்றத் தீர்ப்பின்படி நடந்து கொள்ளவில்லை.

பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றைய பல்கலைக் கழகங்களுக்குத் தேவைக்குக் கூடுதலான எண்ணிக்கை மாணவர்களைத் திணிக்கிறது. ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அதன் வழமையான எண்ணிக்கையைக் கூட வழங்க மறுக்கிறது.

பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு அவசியமான திருத்தங்களைச் செய்து வடக்கு - கிழக்கிலிருந்து கூடுதல் எண்ணிக்கையான மாணவர்களைப் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கும் என்று நாம் நம்புகின்றோம்.

— இப்படி அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

## வடமாகாண பல்கலை. கல்லூரி கிளை; ஜனவரி முதல் யாழ்ப்பாணத்தில்

வடமாகாண இணைந்த பல்கலைக்கழக கல்லூரியின் கிளை ஒன்று யாழ்ப்பாணத்தில் ஜனவரி முதல் செயல்படவிருக்கின்றது.

வடமாகாண இணைந்த பல்கலைக்கழக கல்லூரியின் பணிப்பாளர் கலாநிதி எஸ். மோகனதாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது வவுனியாவில் இயங்கும் இக்கல்லூரியின் கிளை யாழ். பல்கலைக்கழகத்துக்கு சமீபமாக ஆரம்பிக்கப்படும் என்றும் — முதலில் கணக்கியல் டிப்புளோமா, ஆங்கில டிப்புளோமா கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் — அவர் தெரிவித்தார்.

இந்த கிளைக்கு நிரந்தரகட்டடம் அமைக்கக் கூடிய நிலை ஏற்படும்போது வடமராட்சியில் மருத்துவத் துறையும், தென்மராட்சியில் பொறியியல் துறையும் செயல்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## நாளை

கடந்த மாதம் 13 ஆம் திகதி அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனம் நடத்த இருந்த யோகாசன கருத்தரங்கு நாளை பிற்பகல் 3.30 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும். (த)

★ ★ ★

செம்மணி இந்து மயானத்துக்குப் புதிய பரிபாலன சபை ஒன்று தெரிவு செய்யப்பட உள்ளதாக தற்காலிக நடவடிக்கைக் குழுவின் செயலாளர் தெரிவித்தார். அதற்கான கூட்டம் நாளை ஞாயிறு பி. ப. 4 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெறும். (அ)

## 3 வருடத்திற்கு முன்னர் கிழக்கில் கடத்தப்பட்ட ஜீப் கொழும்பில் மீட்கப்பட்டது!

கொழும்பு, நவ. 6

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் வாழைச்சேனையில் வைத்துக் கடத்தப்பட்ட கடதாசிக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான ஜீப் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு ஹைட்பார்க் கோர்னர் அருகில் கூட்டுத்தாபன ஊழியர்களால் கைப்பற்றப்பட்டது.

இப்பன்வல சந்தியில் நபர் ஒருவர் இந்த ஜீப்பைச் செலுத்த முயற்சித்ததை கூட்டுத்தாபனத் தலைமை அலுவலக ஊழியர்கள் சிலர் கண்டதாகவும் —

உடனே அவர்கள் ஜீப்பையும் அதனை ஓட்டிச் செல்ல முயற்சித்தவரையும் பிடித்து கொம்பனித்தெரு பொலிஸிடம் ஒப்படைத்தனர் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஹொரணையில் உள்ள லொத்தர் ஏஜெண்ட் ஒருவருக்கு இந்த ஜீப் விற்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அந்த ஏஜெண்ட் இப்போது தலைமறைவாகி விட்டார்.

## இருவர் வீரச்சாவு

மட்டக்களப்பு — தும்பன்கேணியில் ஸ்ரீலங்கா இராணுவத்துடனான தாக்குதல் ஒன்றில் விடுதலைப்புலி போராளி ஒருவரும் ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

கடந்த 3 ஆம் திகதி அதிகாலை 5.30 மணியளவில் தும்பன்கேணியை இராணுவத்தினர் சுற்றி வளைத்துத் தாக்கியபோது இச்சம்பவம் நிகழ்ந்தது.

வீரவேங்கை பரமகுமார் என்று அழைக்கப்படும் தம்பிராசா சந்திரகுமார் (தேற்றாதீவு) என்ற விடுதலைப் புலிப் போராளியும், குணம் ஆசிரியர் (வளகாமம்) என்ற ஆதரவாளருமோ வீரச்சாவைத் தழுவிக்கொண்டவர்கள் ஆவர். (இ-9)

## யுத்தத்தில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனது பேச்சில் கூறியதாவது;

இராணுவத்தில் சேர கண்டியில் கிராமப்புற சிங்கள இளைஞர்கள் கடும் வெய்யிலில் வரிசையாக நின்றனர். அந்த ஏழை இளைஞர்களுக்கு ஒரு கப் தேநீர் கொண்டு போய்க் கொடுக்க எவரும் எண்ணவில்லை. அந்த இளைஞர்கள் தான் தாய்நாட்டைக் காக்க துப்பாக்கிக்குண்டுக்கு இரையாகப் போகின்றவர்கள்.

யுத்தமுனையில் ஏழைகளின் பிள்ளைகள் மட்டும்தான் கொல்லப்படவேண்டும் என்ற சட்டத்தை இலங்கையில் மட்டும் தான் நாம் பார்க்கின்றோம்.

சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் ஒவ்வொருவரும் இராணுவத்தில் சேர்ந்து பணியாற்ற வேண்டும். எமது இனத்தை இப்போது நாம் சீரழித்து வருகின்றோம்.

இன்றைய நிலைக்கு சாதாரண மக்கள் மட்டுமல்ல, மகா சங்கத்தினருமே காரணமாக உள்ளனர். இவர்களில் ஒருவர் கூட தேசபக்தியுடையவர்கள் அல்லர். 'பண' நிகழ்ச்சிக்கான அழைப்பை ஏற்காத மகா சங்கத்தினரும் இன்று உள்ளனர். அந்த நேரத்தில் தொலைக்காட்சியில் டெலி நாடகங்களைப் பார்க்கவே அவர்கள் விரும்புகின்றனர்.

வடக்கு - கிழக்கில் பெரும் எண்ணிக்கையில் இளைஞர்கள் கொல்லப்படுகின்றனர். தென்பகுதியில் 5 நாள் கிரிக்கெட் போட்டிகள் இரவு பகலாக நடக்கின்றன.

நாட்டின் சொத்தான அப்பாவி இளைஞர்கள் யுத்த முனையில் பதுங்கு குழிகளுக்குப் பின்னால் இருக்கிறார்கள்.

இப்பேரழிவுக்கு தேசியப் பத்திரிகைகள் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் பத்திரிகைகளும் பொறுப்பு ஆகும்.

அழகுராணிப் போட்டிகளுக்கும் டிஸ்கோ நடனங்களுக்கும் தான் இப்பத்திரிகைகள் முக்கியத்துவம் அளிக்கின்றன. பத்திரிகைகள் நாட்டை வழி நடத்த வேண்டும்.

— இவ்வாறு திரு. இம்புலான தெரிவித்தார். (த-எ)

## ருக்மனுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றன.

அனுராவுக்கு இடமளிப்பதற்காக ஏற்கனவே ஆயுள்வேத வைத்தியரான டபிள்யு. ஐ. பெர்னாண்டோ தமது தேசியப் பட்டியல் எம்.பி பதவியை ராஜினாமாச் செய்து விட்டது தெரிந்ததே.

இப்படியாக நியமனம் பெறும் அனுராவும் ருக்மனும் அடுத்தவாரம் பதவிப் பிரமாணஞ் செய்து கொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ருக்மன் சேனநாயக்காவின் தந்தையான றொபர்ட் சேனநாயக்கா முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயக்காவின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.

ருக்மன் சேனநாயக்கா டெடிகம தொகுதியின் ஐ.தே.க. எம். பியாக தெரிவு செய்யப்பட்டதும்—

ஜெயவர்த்தனா அரசாங்கம் இருந்தபோது ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் அக்கட்சியில் இருந்து விலகி ஐக்கிய இலங்கை மக்கள் கட்சியை ஆரம்பித்ததும் தெரிந்ததே.

பிரேமதாசா அரசு பதவிக்கு வந்ததும் ருக்மன் தமது கட்சியைக் கலைத்து விட்டு மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-எ)

## கவிஞர் புதுவை இரத்தினதுரையின் "நினைவழியா நாட்கள்" கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 6

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 'நினைவழியா நாட்கள்' கவிதை நூல் வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறும்.

தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் திரு வெ. இளங்குமரன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் வண. பிதா. பிரான்சிஸ் யோசப் அடிகள், துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் மங்கள விளக்கேற்றுவர்.

இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கத்தின் தமிழ் வாழ்த்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். கலை, பண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு. சி. சேரலாதன் வரவேற்புரையையும், தமிழீழக் கல்விக்கழகத்தைச் சேர்ந்த திரு. வே. பாலகுமாரன் வெளியீட்டுரையுமை நிகழ்த்துவர்.

தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய வாழ்த்துரையைத் தாங்கி வரும் ''நினைவழியா நாட்கள்'' கவிதை நூலை, தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் வெளியிட்டு வைப்பார்.

இந்நூலின் மதிப்புரையை பண்டிதர் வீ. பரந்தாமன், கவிஞர் சோ. பத்மநாதன், பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் நிகழ்த்துவர். நூலாசிரியர் உரையைத் தொடர்ந்து நன்றியுரையை யாழ்.மாவட்டக் கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. இ. ம. அன்பரசன் ஆற்றுவார். விழாவில் இறுதியில் சிறப்பு நிகழ்ச்சியாக சங்கீதபூஷணம் என். வீ. எம். நவரத்தினம், திரு. வர்ணராமேஸ்வரன் ஆகியோர் பாடும் 'தமிழிசை அரங்கு' இடம்பெறும். (த)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 6

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு நாளை மறுதினம் திங்கட் கிழமை நடைபெற உள்ளதால் அது பற்றி கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 1 மணிக்கு யாழ். புத்தூர் சோமஸ்கந்தா பாடசாலை மண்டபத்திலும், பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி றிபேக் கல்லூரி மண்டபத்திலும் நடைபெற உள்ளது.

இந்தப் பகுதிகளுக்கு உட்பட்ட க.பொ.த சாதாரண தர வகுப்பைக் கொண்ட பாடசாலை அதிபர்கள், கொத்தணி அதிபர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் தேர்வு நிலையங்களுக்கு தெரிவு செய்து கடமை புரிந்த பிரதம உதவி தேர்வாளர்களையும் கருத்தரங்கில் கலந்துகொள்ளும்படி தேர்வு ஆணையாளர் கேட்டுள்ளார். (ஓ-9)

## தபால்களை சேர்ப்பிக்க கோரிக்கை

கப்பலுக்கு தபால்கள் எடுத்துச் செல்லப்பட இருப்பதால் இன்று காலை 9.30 மணிக்கு முன்பதாக வெளியூர்த் தபால்களை யாழ். பிரதம தபாலகத்தில் சேர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (இ-17)

( சீதனக் குப்பை சேதனப் பசளை )

ஓம்
ஜெய் பிரேம சாந்தி

## அறிவித்தல்

இத்தாற் சகலருமறிய சுன்னாகம் திருமதி பாக்கியலட்சுமி நடராஜா ஆகிய நான் அருள்மிகு சுவாமி பிரேமானந்தா அவர்களால், சிறீ பிரேமானந்தா ஆசிரம வடபிரதேச ஒருங்கிணைப்பாளராக 18-08-1993 முதல் நியமிக்கப்பட்டுள்ளேன். ஆசிரம சம்பந்தமான விடயங்கள் பற்றி எம்முடன் தொடர்பு கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறேன்.

ஜெய் பிரேம சாந்தி

திருமதி பாக்கியலட்சுமி நடராஜா.

தம்பி குமார் வீதி,
எரிபொருள் விற்பனை நிலைய அருகாமை,
சுன்னாகம். [27902]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 17 — 08 — 1953

உதிர்வு: 29 — 10 — 1991

### அமரர் குகதாசன் (சிவம்)

கணப்பொழுதேனும் எங்களைப் பிரிந்திருக்க முடியாத நீங்கள் அடி துடிக்கவிட்டு எப்படித் தான் பிரிந்தீர்களோ அப்பா!

இறைவனடி சேர்ந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி: சாரதா,
மகள்: கிந்தா,
மகன்: கணேன்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(27901)

## மரண அறிவித்தல்கள்

திருமதி
### சோமகலாவல்லி சண்முகலிங்கம்

(போஷகர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளை)

டாக்டர் சோ. சண்முகலிங்கம் அவர்களின் அன்பு மனைவி சோமகலாவல்லி சண்முகலிங்கம் 02-11-93 அன்று காலமானார். அன்னார் கொடிகாமம் காலஞ் சென்ற திரு. திருமதி பேரம்பலம் செல்லையா தம்பதிகளின் புதல்வியும், காலஞ் சென்ற திரு. செ. சோமசேகரம், திருமதி இராசம்மா சோமசேகரம் அவர்களின் மருமகளும், சோமேஸ் விக்னராஜ், நாகநந்தினி, செல்வலட்சுமி ஆகியோரின் தாயாரும், கல்யாணி, குணராஜ், ஞானப்பிரதீபன் ஆகியோரின் அன்பு மாமியாரும், வள்ளி, மதுமிதா, கீர்த்தனா ஆகியோரின் பாசமுள்ள பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று சனிக்கிழமை (06-11-93) மு. ப. 10-30 மணிக்கு நடைபெற்று, கோம்பையன் மணல் மயானத்திற்கு பூதவுடல் தகனம் செய்யப்படுவதற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறேன்.

தகவல்:
டாக்டர் சோ. சண்முகலிங்கம்.

180A, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி- 6312)

### திருமதி திருநாவுக்கரசு தருமலட்சுமி

வேலணை மேற்கை பிறப்பிடமாகக் கொண்டவரும், தாவடி வடபத்திரகாளி கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி திருநாவுக்கரசு தருமலட்சுமி 4-11-93இல் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை பத்தினிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வியும், நகுலேஸ்வரி, இராசரத்தினம் (விஜிதா அரிசி ஆலை), நவரத்தினம்மா, மங்கையர்க்கரசி (ஆசிரியை, சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி), சிவரத்தினம் (என். கே. அரிசி ஆலை கொக்குவில்), மீனாம்பாள் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், துரைசிங்கம் (A. K. T. முன்னாள் காலி வர்த்தகர்), யோகம்மா, சிவஞானம் (முன்னாள் மரக்கூட்டுத்தாபன ஒப்பந்தகாரர்), திருநாவுக்கரசு (நீதவான் சாவகச்சேரி), சிவகலை, தயாளன் (கணக்காளர், கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற பாக்கியலட்சுமி, காலஞ்சென்ற கந்தசாமி, காலஞ்சென்ற சண்முகம், திருமதி அன்னமுத்து, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (5-11 93) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன. இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
தி. இராசரத்தினம்
(மகன்)

வட பத்திரகாளி கோவிலடி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.

(27916)

### இளையதம்பி தம்பையா

315/3 பலாலி வீதி திருநெல்வேலி தெற்கைச் சேர்ந்த இளையதம்பி தம்பையா 5-11-93 இல் காலமானார்.

அன்னார் கனகாம்பிகையின் அன்புக் கணவரும், திருமதி பா.தவமலர், திருமதி மா.கமலராணி, திரு. த.சிவசுப்பிரமணியம், திரு. த.பற்குணம் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. எஸ்.பாலசுப்பிரமணியம், திரு. எஸ்.மாணிக்கவாசகம், திருமதி சி. கலாநிதி, திருமதி ப.ராஜமாநந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (6-11-93) பிற்பகல் 3 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக அவரது இல்லத்திலிருந்து கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
எஸ். பாலசுப்பிரமணியம்

315/3 பலாலி வீதி,
திருநெல்வேலி.

(27930)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 06 - 11 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


### யாழ். ரிட்-ரவுன் ரோட்டரக்ற் கழகம்
நடத்தும்

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

முதல் நாள் ஆட்டம்

காலம்:- 06—11—1993 (இன்று) மாலை 3-மணி.
இடம்:- பல்கலைக்கழக மருத்துவபீட மைதானம்.

சென். நீக்லெஸ் எதிர் ஜங்ஹென் றீஸ்
சென். மேரீஸ் எதிர் ஞானமுருகன்

[சி/6324]



## எஸ். எம். பேர்னாண்டோ
(கண்ணாடி வழங்குபவர்கள்)
ஆதரவில்
யாழ்ப்பாண மேசைப்பந்தாட்ட சங்கத்தினரின்
2 வது மேசைப்பந்தாட்டப் போட்டி
(இறுதி ஆட்டங்கள்)

இடம்:- யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபம்
காலம்:- **06 — 11 — 1993** இன்று மாலை 3 மணி

பிரதம விருந்தினர்:-
பேராசிரியர் வி. தர்மரட்ணம்
(தலைவர், கணிதத்துறை விஞ்ஞான பீடம்
யாழ். பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

போட்டிகள் அமைப்புக்குழு
—செயலாளர்—

(27926)


யாழ்ப்பாணம்
அரசினர் பொது வைத்தியசாலைக்கு
தனிப்பட்ட பாதுகாப்புச் சேவைக்கான
ஒப்பந்தத்துக்கு

## விண்ணப்பம் கோரல்

யாழ். அரசினர் பொது வைத்தியசாலைக்கு 01-01-1994இல் இருந்து 31-12-1994 வரையான காலப்பகுதியில் பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்கு, அண்மைக்காலத்தில் பாதுகாப்பு அமைச்சினால் / அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் வைத்திருக்கும் நிறுவனங்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகள் 20-11-1993 காலை 10-00 வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் 20-11-1993 காலை 10-00 மணிக்குத் திறக்கப்படும்.

கேள்விகளுடன் பாதுகாப்பு அமைச்சினால் / அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை காரியாலய நேரத்தில் என்னிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.


கேள்விகளை பதிவு அஞ்சல் மூலமோ, அன்றி நேரடியாகவோ அனுப்பி வைக்கலாம்.

டாக்டர் செல்வி ந. கனகரத்தினம்,
பணிப்பாளர்.

அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்,
04-11-1993.

[சி-6319]

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 17 — 08 — 1953

மறைவு: 29 — 10 — 1991

### அமரர் ஆறுமுகம் குகதாசன்
(சிவம்)

பத்தைமேனியை பிறப்பிடமாகக் கொண்டவரும் மிருசுவில் கண்ணகை அம்மன் கோயிலில் கண்ணின் கருமணியாய் — காவியத்தின் நாயகனாய் மண்ணின் மணிவிளக்காய் மாசுபடா ரத்தினமாய் விளங்கி, எங்கள் எல்லோரையும் ஆதரித்து அரவணைத்த அன்புத் தெய்வம் (சிவம்) இறுதியில் அண்ணன் சந்திரதேவாவின் அன்புக் கரங்கள் அணைத்து எடுக்க மண்ணுலகை விட்டு விண்ணுலகில் சிவத்தோடு சேர்ந்து சிவநாமம் பூண்டு சிவமாக விளங்கும் எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்திபெற வாழ்த்தி வணங்குவோர்,

உன் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, பிள்ளைகள்,
சகோதரர், சகோதரிகள்,
சந்திரதேவா குடும்பம்,
மைத்துனர்கள், மைத்துனிமார்கள்,
பெறாமகள், மருமக்கள்,
சாரதி தாத்தா.

தகவல்: வி. சந்திரதேவா
பழைய வாய்க்கால்
மிருசுவில்.

(27918)

## விளையாட்டு நிகழ்வுகள்

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 33 ஆவது ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டியும் இன்றும், நாளையும் பருத்தித்துறை திக்கமுனை விளையாட்டு மைதானத்தில் நடைபெற உள்ளன.

10 மைல் மரதன் ஓட்டப் போட்டியுடன் ஆரம்பமாகும் இவ்விளையாட்டு விழாவில் பருத்திநகர் சாண்டோ எம். துரைரத்தினத்தால் பயிற்றப்பட்ட பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக இளம் வீரர்களின் வீரதீரச் செயல்களும் இடம்பெறும்.

(இ-173-109)

★ ★ ★

யாழ்.மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு விழா தொடர்பான மாணவர்களுக்கிடையிலான பட்மின்டன் இறுதி நிலைப்போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8-00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். (இ)

★ ★ ★

தென்மராட்சி உதைபந்தாட்ட சபையால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று பிற்பகல் 3-30 மணிக்கு மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

ஆட்டத்தில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ காட்சி ஆட்டம் — மட்டுவில் மோகனதாஸ் வி. க. எதிர் கெற்பலி பண்டிதர் வி. க.

★ இறுதியாட்டம்—புங்குடுதீவு அம்பாள் வி. க. எதிர் நாவற்குழி வி. க. (த-3)

★ ★ ★

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கத்தால் புதிய மத்தியஸ்தர்களைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்பட்ட பரீட்சையின் உடல் தகுதிகாண் பரீட்சை நாளை காலை 7 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

★ ★ ★

யாழ். கல்வித் திணைக்களம் யாழ். மாவட்ட பாடசாலைகளிடையே நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் — மாவட்ட நிலை ஆட்டங்களில் இன்று பிற்பகல் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் மோதும் அணிகள் வருமாறு:-

★ 19 வயதுப் பிரிவு:— உரும்பராய் இந்து எதிர் உடுப்பிட்டி அ. மி. த. க.பா.

★ 17 வயதுப் பிரிவு:— சென். சார்ள்ஸ் எதிர் உடுப்பிட்டி அ. மி. த. க. பா.

★ ★ ★

யாழ். பலநோக்குக் கூட்டுறவு சங்க விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் — யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு இடையிலான — மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்ட மற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் முறையே இன்றும் நாளையும் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 2-30 மணி முதல் நடைபெறும்.

★ ★ ★

யாழ். கல்வித் திணைக்களம் யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கிடையில் நடத்தும் பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை காலை 8 மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரி உள்ளக அரங்கில் நடைபெறும்.

(உ)

### இன்றும் நாளையும் சங்க கடைகள் திறப்பு

யாழ்ப்பாணம், நவ. 6

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு யாழ். ப. நோ. கூ. சங்கத்தின் சகல கிளைகளும் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் முழுநேரமாகத் திறந்து வியாபாரம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-162)

### சஞ்சிகை வெளியீடு

''துர்க்கா'' இந்து கலை, இலக்கிய மாத சஞ்சிகையின் வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுதுமலை அம்மன் கோயிலில் நடைபெறும்.

வெளியீட்டு விழாவில் பல அறிஞர்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார்கள். நடனம், நாடகங்கள், கவியரங்கம் ஆகியனவும் இடம்பெறும்.

(க-161)

### பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், நவ. 6

ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் ஓய்வு பெறும் அதிபர் திரு. பொ. பாலசிங்கத்திற்கு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கல்லூரியில் பிரிவுபசார விழா ஒன்றை நடத்துகின்றனர்.

### ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ. 6

ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமையில் நடைபெற்று வரும் புலிகளின் குரல் கலைஞர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்ச்சி இன்று நடைபெற மாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)


### இன்றும் நாளையும் காணத்தவறாதீர்கள்!
யாழ். ரோட்டரக்ற் கழகம்
நடத்தும்

## மாபெரும் கண்காட்சி

✲ புகைப்படக் கண்காட்சி
✲ மனையியல் கண்காட்சி

அத்துடன்

### தீபாவளி மலிவு விற்பனை

★ ஆடைகள் ★ சாறிகள்
★ பாதணிகள் ★ அழகுசாதனப் பொருள்கள்

இடம்: சென். பற்றிக்ஸ் கல்லூரி
காலம்: **6. 7 — 11 — 1993**
நேரம்: காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை

அன்பளிப்பு:
பேபி போட்டோ
பலாலி வீதி, திருநெல்வேலி.

(27928)


### உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
### பொது அறிவுப் போட்டிப் பரீட்சை-1993

இன்று 06-11-1993 இல் நடைபெறவிருந்த மேற்படி பரீட்சை தவிர்க்க முடியாத காரணங்களால் பின்போடப்பட்டுள்ளது.

● பரீட்சை நடைபெறும் திகதி விரைவில் அறிவிக்கப்படும்.

தலைவர்,
உ. த. ப. இ.

[27922]

## JAFFNA MEDICAL ASSOCIATION
### Annual General Meeting - 1993

Annual General Meeting of the above association Will be held on 20 th Nov. '93 (Saturday) at 12 Noon in the clinical Lecture Hall, General Hospital, Jaffna. Please be present.

Dr Kailainathan
Hony. Secretary

(6586)


## புதிய கம்பியூட்டர் பயிற்சி
வகுப்புக்கள்

### INTRODUCTION TO COMPUTER AND BASIC LANGUAGE

ஆரம்பம்: **10 NOV. 93**

✲ வார நாட்கள் (திங்கள் முதல் வெள்ளி வரை)
✲ காலை வகுப்புக்கள்

விபரங்கட்கு:
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St. Peter's Lane, JAFFNA.

(சி/6529)



## மாபெரும் கைப்பணிக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

சாவகச்சேரி பனை – தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க மகளிர் அமைப்பின் கைவண்ணத்தில் உருவான பனை ஓலை கைப்பணிப் பொருட்களும், அலங்கார வேலைப்பாடுகளுடனான தையற் பொருட்களும் காட்சிப்படுத்தப்படுவதோடு, மலிவு விலையில் விற்பனையும் செய்யப்படும்.

கண்காட்சி: 06 - 11 - 1993, 07 - 11 - 1993 (சனி, ஞாயிறு)
மலிவு விற்பனை: 07 - 11 - 1993
இடம்: சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயம்.
நேரம்: மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

நிர்வாகிகள்,
பனை - தெ. வ. அ. கூ. சங்கம்,
சாவகச்சேரி.

[27918]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org